## வாசகர் கடிதம்

# சிறையிலிருந்து ஒரு கடிதம்

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய பத்திரிகை ஆசிரியர்க்கு!

*ஒரு பேப்பர்* ரின் 104 ஆவது இதழ் எமக்குக் கிடைத்தது. சகல பக்கங்களையும் வாசித்தோம், அறிந்தோம், வியந்தோம், மகிழ்ந்தோம். ஏன் என்றால் வெளியில் அதாவது லண்டனில் நடக்கும் விடயங்கள் *ஒரு பேப்பர்* ரில் படிப்பது போல் எமக்கு, யாரும் சொல்வதுமில்லை எம்மால் தெரிந்து கொள்ள முடிவதுமில்லை நாங்கள் இந்த நாட்டில் சிறையில் இருக்கின்றோம்.

விடயம் என்னவெனின் உங்கள் பேப்பரில் அதாவது எங்கள் *ஒரு பேப்பர்* ரில் நவம்பர் 14 - நவம்பர் 26 என்று அச்சிடப்பட்டு 27 பக்கத்தில் ‘ஈழம் தமிழ் சினிமாவின் ஆறு மணி நேரத் தியாகம்’ என்ற தலைப்பில் ஓர் நிகழ்வின் ஆய்வுக் கட்டுரை மாதிரியும் விமர்சனப்பார்வை போன்றதோர் தொனியிலும் கட்டுரை என்று நினைத்து நீங்கள் இரண்டு பக்கங்கள் எழுதியிருந்தீர்கள். அதிலும் உண்ணாவிரதத்திற்கு வந்தவர்களை உங்கள் அறிவிற்கும் திறமைக்கும் ஏற்ப வகையில் நன்றாக விமர்சித்திருக்கிறீர்கள். இதன் மூலம் உங்கள் துறை சார் புலமையை பத்திரிகை மூலம் வெளிப்படுத்த முயன்றிருக்கிறீர்கள்.

ஐயா பெரியவரே எழுதுபவர்கள் எல்லாம் அனுப்பும் கட்டுரைகளையும் கடதாசிகளையும் பிரசுரிப்பதற்கு உகந்ததா என்பதைக் கண்டறியும் காரியமல்லவோ ஆசிரியத் தொழில். அக்கட்டுரையில் நடிகர்கள் ஈழத் தமிழர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அக் கட்டுரையாசிரியர் குறிப்பிட தவறிவிட்டார். எம்.ஜி. ஆர். ஈழத் தமிழர்கள் இன்று வரை தன்மானத்துடன் நிமிர்ந்து நிற்க ஓர் காரணம். அது மட்டுமல்ல அவர் செய்த உதவிகள் இந்த காலகட்டத்தில் வெளிவிடபட முடியாத இரகசியங்கள் உள்ளடங்கிய விபரம் என்று தேசியத் தலைவரே தமது உரையாடல்களில் பல முறை தெரிவித்திருக்கிறார்.

ஜெனீவாவில் ஐ.நா சபை முன் போராட்டம் நடந்த போது ஐரோப்பாவில் உள்ள 6 லட்சம் தமிழர்களில் எத்தனை பேர் கலந்து கொண்டு இருக்கின்றோம்?

செஞ்சோலை சிறார்கள் வன்னியில் குண்டு வீசி கொலை செய்யப்படுகிறார்கள் அதை பயங்கரவாதிகள் அழிப்பு என்று கூறிய BBC முன் எத்தனை பேரையா வந்து நின்றீர்கள்?

ஓர் தமிழர் அழிப்பு நடவடிக்கையில் வெளிக் கொணர்வு நிகழ்ச்சி எத்தனை பேர் வந்து அதில் அந்த நிகழ்ச்சி நடத்தப்பட சரீர உதவி செய்கிறீர்கள்?

இந்த நாட்டில் அல்லது எந்த புலம்பெயர் நாட்டி லாவது உங்கள் இனத்தவனை நீங்கள் அரவணைத் திருக்கிறீர்களா?

ஒன்றுமே இல்லை அதாவது நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் நானும் என் மனைவியும் இரவெல்லாம் உறங்காமல் கண் விழித்து கஸ்ரப்பட்டு குழந்தை ஒன்று பெற்றுத் தருகின்றோம் நீங்கள் அதை நன்றாக வளர்த்துவிட்டால் போதும். இந்த சின்ன உதவியை நீங்கள் செய்யுங்கள் அந்த பெரிய காரியத்தை நாங்கள் செய்கின்றோம் என்றல்லவா சொல்கிறீர்கள்.

அந்த உண்ணாவிரத மேடையில் சத்தியராஜ் திருமா வளவன் இன்னும் உமக்குத் தெரியாத தலைமைக்கு ஆதரவான பலர் உண்டு. அவர்களுக்கு ஏனும் ஓர் சிறு நன்றி சொல்ல உமக்கேன் பெரிய மனது வரவில்லை என்ற ஏக்கம் எனக்குண்டு.

ஐயா பயணம் தான் முக்கியமே தவிர பஸ் முக்கியமில்லை எமது மக்கள் படும் பாட்டை வெளி உலகுக்கு காட்ட இதை ஓர் சந்தர்ப்பமாக நாம் உபயோகிப்போமா?

வன்னியில் குண்டுமழை என்று லண்டன் தன்னார்வ தமிழ் தொண்டு நிறுவனங்களும் *ஒரு பேப்பர்*, வடலி பேப்பர், புதினம் பேப்பர்.. இன்னும் பல பேப்பர் கள் தமிழ் ஆலயங்கள் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்து நடாத்திய உண்ணாவிரதத்தினையும் அதன் எழுச்சி யையும் தன் இனம் மேல் புலம் பெயர் தமிழர் கொண்டி ருக்கும் பாசத்தையும் பார்த்து துடித்துப் போகணும். 3 லட்சம் தமிழர்கள் உள்ள UK யில் 4 Free பேப்பர் வெளிவரும் ஐரோப்பியா தேசத்தில் ஒன்றான லண்டனின் நீங்கள் என்ன செய்தீர்கள் ஐயா?

பிழை காண்பது சுலபம். சுபம் காண்பதோ கடினம் தென்னிந்திய நடிகர்கள் இவ்வளவு செய்தார்கள் என்று காண்பித்து தமிழ் மக்களுக்கு அவர்கள் மூலம் நன்றி சொல்லி அந்த நடிகர்களை அடுத்த கட்ட நகர்வுக்கு கொண்டு போவதல்லவா நகர்வு அவை இல்லாத செயல்களெல்லாம் உமக்கு பின்நகர்வு.

நீங்கள் கூறியது அனைத்தும் உண்மையாய் இருக் கலாம். சரி அப்படியென்றால் ஈழத்தமிழர்களுக்கு தென் னிந்திய நடிகர்கள் என்ன செய்ய வேண்டும் என்றாவது அந்தக் கட்டுரையில் தெரிவித்து இருக்கிறீர்களா?

ஈழத்தமிழர்களில் இங்கு பிறந்த எத்தனை பேருக்கு எமது இனம், மதம், கலாச்சாரம், கட்டுப்பாடு, இனப்பிரச் சினை, இக்கட்டான சூழ்நிலை, இடப்பெயர்வு, புலம் பெயர்வு பற்றித் தெரியும்? இப்படி இருக்கும் போது டி. ராஜேந்தர் மகன் சிம்புவுக்கு ஈழத்தமிழர் பிரச்சினை விபரமாகத் தெரியவில்லை என்ற கடும் விமர்சனம் ஏன் உமக்கு?

முதலில் நமக்கு நாம் புரிந்துணர்வோடு இருப்போம் புலம் பெயர்ந்தவர்க்கு இடம் பெயர்ந்தவர் கஸ்ரத்தை நீர் புரியவையும். இங்குள்ள தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளுக்கு எமது வரலாற்றை வாய் வழியாக சொல் லட்டும். இங்குள்ள இளைஞர்கள் இயன்ற உதவியை செய்ய வேண்டியவர்களுக்கு செய்யட்டும். பலராமனை விட பலசாலிகள் இந்தப் பத்திரிகைகள் அவைகளை தங்கள் காரியங்களை சரியாகச் செய்யட்டும்.

நான் உங்களில் பிழை சொல்லி நீங்கள் செய்த தவறை நானும் செய்ய விரும்பவில்லை. நீங்கள் எழுதியது சரி. ஆனால் அந்த விமர்சனத்தை கொஞ்சம் குறைத்திருக்கலாம் காரணம் அப்படி ஓர் நிகழ்ச்சிநிரலை ஏற்பாடு செய்ய நாம் படும் பாடு எம்மை போன்ற ஓர் சிலருக்கே தெரியும்.

நாம் வைக்கும் விமர்சனங்கள் அவர்களை வெறுப் படைய வைத்து விடக் கூடாது என்பதற்காகவே இதை எழுதுகின்றேன் தவிர உங்கள் போல் பேப்பரும் ஓசி விமர்சனமும் விரும்பியபடி இருக்கக் கூடாது. ஓர் தனி மனிதர்களை அதுவும் நடிகர்களை விமர்சனத்துக்கு பெயரோ அல்லது உரிமையோ யார் என்றோ தெரிவிக்காமல் வெளியிடுவது பத்திரிகை தர்மம் ஆகாது.

ஐயா லண்டனில் தனக்கென தனியான இடத்தைப் பிடித்துள்ளது இந்த *ஒரு பேப்பர்*. எனவே இதில் வரும் ஆக்கங்கள் ஆதாரபூர்வமானதுமாயும் அறிவார்ந்தது என்றபடியால் ஓர் கருணையுள்ளம் கொண்ட கடைக்காரர் மூலம் இதைப் பெற்று படித்து வருகின்றோம் எனவே இதைப் பற்றி விமர்சனம் செய்யும் உரிமையும் எமக்குண்டு என்ற தைரியத்தில் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன்.

இக்கடிதத்தை சுருக்கி இன்னொரு பேப்பரில் உங்கள் விருப்பப்படி அவர்களுக்கு அதாவது தென்னிந்திய நடிகர்களுக்கு நன்றி கூறி சிறு செய்தி வெளியிட்டால் மகிழ்ச்சி அப்படி வெளியிட்டால் அந்த *ஒரு பேப்பர்* ரையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

*- யசந்தன்*
H.M. Prison, Canterbury, UK

# நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் பொசிகிறதா?

தாயகத்தில் எங்கள் உறவுகள் படும் துயர் கண்டு துடிப்பதற்குத் தமிழனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. மனிதாபிமானமுள்ள எந்த ஆறறிவு படைத்த உயிரும் அந்த மக்கள் நிலை கண்டு கலங்குவார்கள், இரங்குவார்கள்.

ஒட்டுமொத்த சர்வதேசத்தினாலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில், பெரும்பாலான தொண்டர் நிறுவனங்களும் வெளியேறி விட்ட நிலையில், அந்த மக்களின் அவலம் சொல்லில் அடக்கமுடியாதது.

உண்ண உணவின்றி, தங்குவதற்குச் சரியான இருப்பிடமின்றி, சிங்கள இராணுவத்தின் செல்லடிகளுக்கும் குண்டு மழைகளுக்கும் அஞ்சுவதுடன் மட்டுமன்றி பாம்பு போன்ற விச ஜந்துகளுக்கும் அஞ்சியஞ்சி வாழும் எம் சக உறவுகளின் நிலை கண்கலங்க வைக்கிறது.

எமது மக்களுக்கு உள்ள ஒரே துணை நாங்கள் தான் என்ற நிலையில் துன்பத்தில் வாடும் எம் தமிழ் உறவுகளுக்காய் நிதி சேகரிக்கும் நிகழ்வுகள் புலம் பெயர் நாடுகள் அனைத்திலும் நடந்து கொண்டிருக்கிறது. இது தொடர்பான செய்திகளுக்கு *ஒரு பேப்பர்* உள்ளிட்ட பல ஊடகங்களும் முதன்மையளிப்பதையும் காணக் கூடியதாகவிருக்கிறது.

துரதிஸ்டவசமாக மக்களின் அவலங்களைச் சொல்லிச் சேகரிக்கப்படும் பணத்தை விழுங்கி ஏப்பம் விடும் மனதாபிமானமற்ற செயல்களும் ஆங்காங்கே இடம்பெறுவதான செய்தி காதுகளை எட்டுகிறது.

இது போல தாயக மக்களுக்காக என்ற பெயருடன் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளின் மூலம் திரட்டப்பட்ட பணம் சில தனிநபர்களின் கஜானாக் களை நிரப்புவதாகப் பரவலாகப் பேச்சடிபடுகிறது.

எனவே நிகழ்வுகள் குறித்த செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஊடகங்கள் குறித்த நிகழ்ச்சியின் மூலம் திரட்டப்பட்ட பணம் சேர வேண்டியவர்களுக்குச் செம்மையாகப் போய்ச் சேர்ந்ததா என்பது குறித்த விபரங்களையும் ஊடகங்கள் மூலம் வெளியிடுவது கடமை என்பது என் கருத்து.

இதன் மூலம் மேற்குறித்த சமூகவிரோதிகள் மக்கள் முன் அம்பலப்படுத்தப்படுவார்கள் அல்லவா?

அதே வேளை பெரும்பாலானவர்கள் தாயக நோக்குடன் செயற்பட்டு நிதி சேகரிப்பைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த இடத்தில் சொல்லியேயாக வேண்டும்.

நீங்கள் மக்கள் பணத்தை ஏப்பம் விடும் புல்லுருவிகளை இனங்காட்டுவதன் மூலம் உண்மையான எண்ணத்துடன் செய்ற்படுபவர்கள் மேலும் பலன டைவார்கள் என்பது எனது கருத்து

*- ஆ. ஆசைப்பிள்ளை*

# தமிழா உனக்கு உணர்வில்லையா?

சிங்கள இனவெறி அரசின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தமிழக அரசியல் தலைவர்களை கோமாளிகள் என்று கிண்டலடித்த செய்தி தமிழக அரசியல் தலைவர்களை சீற்றத்திற்குள்ளாக்கியிருக்க வேண்டும்.

ஆனால் தமது கதிரைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் வேறு சில அரசியல் நலன்களுக்காகவும் தமிழகத்தின் பல அரசியல் தலைவர்களும் வாய் மூடி மௌனம் காத்து வருகின்றனர்.

அறிக்கை விடுவதையே தொழிலாகக் கொண்ட சுப்பிர(ா)மணிய சாமி மௌனம் காப்பது நியாயமானது. காரணம் சரத் பொன்சேக்கா சொன்ன கோமாளி என்ற பதம் அவருக்குப் பொருத்தமானதே.

ஆனால் கருணாநிதி, ஜெயலலிதா உள்ளிட்டோர் தாங்கள் கோமாளிகள் என்பதை ஒத்துக் கொள்கிறார்களா?

சின்னஞ் சிறிய நாட்டின் இராணுவத் தளபதியால் சீண்டப்பட்ட பின்பும் மௌனம் காக்கும் இவர்கள் தமிழ்நாட்டை ஆளத் தகுதியானவர்கள் தானா? இத்தகைய அசமந்தப் போக்கு நாளை தமிழகத் தலைவர்களைப் பயங்கரவாதிகள் என்று சொல்லும் துணிவை சிங்களவனுக்குக் கொடுக்கும் என்பதை நினைவில் கொள்வது நல்லது

*- க. சிவசுப்பிரமணியம்*

**அகதித் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டிருக்கின்றீர்களா?**

**உங்கள் விண்ணப்பங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளீர்களா?**

**நாடு கடத்துவதற்காகத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்களா?**

***“தமிழ் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றது”***

தஞ்சக் கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்பட்டு, திரும்பவும் நாடு செல்ல விரும்பாத தமிழர்களை – கட்டாய நாடு கடத்தலில் இருந்து நிற்பாட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் (European Court of Human Rights) உங்கள் நாடு கடத்தலை ஐக்கிய ,ராச்சியத்திற்கு எதிராக தடை உத்தரவை பிறப்பித்து நிற்பாட்டி பிணையின்றி தடை முகாம்களிலிருந்து வெளியில் எடுத்து விடுவதில் முன்னனியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் தமிழ் கொமியூனிற்றியை உடன் அழையுங்கள்

**020 8444 6655.**

கடந்த 10 மாதங்களில் 130க்கும் அதிகமான தமிழர்களின் நாடு கடத்தலைத் தடுத்து, தடுப்புக் காவலில் இருந்து பிணையின்றி வெளியில் எடுத்து விட்டிருக்கின்றோம்.

இன்று 300க்கும் அதிகமான தமிழர்களை திருப்பி அனுப்புவதை தடை செய்யப்பட்டமைக்கு தமிழ் கொமியூனிற்றி தொண்டர் நிலையம்தான் முதற் காரண கர்த்தாவாக அமைந்துள்ளது.

மனச்சாட்சியற்ற, கண்ணியமற்றவர்களின் சேவையினால் பயந்த நிலையில் கவலை கொண்டுள்ளீர்களா?

**“யாமிருக்கப் பயம் ஏன்?”**

அழையுங்கள்:

**தமிழ்க் கொமியூனிற்றி நேசக் கரம் நீட்டுகின்றோம்**

**0208 444 6655**

*தமிழர் அறங்காவற் கட்டளை*
(இலக்கம்: 1117267)

**tamil community**
**“building a better community”**
**CA House**
**28-30 Muswell Hill Broadway**
**London N10 3RT**
**Tel: 020 8444 6655**
**Fax: 020 8444 6244**
**Email: info@thamilcommunity.org**
**www.thamilcommunity.org**